
தெய்வச் சேக்கிழார் பெருமான்
சமயக் குரவர் நால்வர்
மாணிக்க வாசக சுவாமிகள்
சிவன் மனதில் இடம் பிடித்த செல்வர்கள் 63 நாயன்மார்கள் மற்றும் 9 தொகையடியார்கள்

# 63 நாயன்மார்கள்

- அதிபத்த நாயனார்
- அப்பூதியடிகள் நாயனார்
- அமர்நீதி நாயனார்
- அரிவாட்டாய நாயனார்
- ஆனாய நாயனார்
- இசைஞானியார் நாயனார்
- இடங்கழி நாயனார்
- இயற்பகை நாயனார்
- இளையான்குடி மாறநாயனார்
- உருத்திர பசுபதி நாயனார்
- எறிபத்த நாயனார்
- ஏயர்கோன் கலிக்காம நாயனார்
- ஏனாதி நாத நாயனார்
- ஐயடிகள் காடவர்கோன் நாயனார்
- கண்ணப்ப நாயனார்
- கணநாத நாயனார்
- கணம்புல்ல நாயனார்
- கலிக்கம்ப நாயனார்
- கலிய நாயனார்
- கழற்சிங்க நாயனார்
- கழறிற்றறிவார் நாயனார்
- காரி நாயனார்
- காரைக்கால் அம்மையார்
- குங்கிலியக்கலய நாயனார்
- குலச்சிறை நாயனார்
- கூற்றுவ நாயனார்
- கோச் செங்கட் சோழ நாயனார்
- கோட்புலி நாயனார்
- சடைய நாயனார்
- சண்டேஸ்வர நாயனார்
- சத்தி நாயனார்
- சாக்கிய நாயனார்
- சிறப்புலி நாயனார்
- சிறுத்தொண்ட நாயனார்
- சுந்தரமூர்த்தி நாயனார்
- செருத்துணை நாயனார்
- சோமாசிமாற நாயனார்
- தண்டியடிகள் நாயனார்
- திருக்குறிப்புத் தொண்ட நாயனார்
- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
- திருநாவுக்கரசு நாயனார்
- திருநாளைப் போவார் நாயனார்
- திருநீலகண்ட நாயனார்
- திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்
- திருநீலநக்க நாயனார்
- திருமூல நாயனார்
- நமிநந்தியடிகள் நாயனார்
- நரசிங்கமுனையரைய நாயனார்
- நின்றசீர் நெடுமாற நாயனார்
- நேச நாயனார்
- புகழ்ச்சோழ நாயனார்
- புகழ்த்துணை நாயனார்
- பூசலார் நாயனார்
- பெருமிழலைக் குறும்ப நாயனார்
- மங்கையர்க்கரசியார் நாயனார்
- மானக்கஞ்சாற நாயனார்
- முருக நாயனார்
- முனையடுவார் நாயனார்
- மூர்க்க நாயனார்
- மூர்த்தி நாயனார்
- மெய்ப்பொருள் நாயனார்
- வாயிலார் நாயனார்
- விறன்மிண்ட நாயனார்




# 1.அதிபத்த நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| பரதவர் | ஆவணி ஆயில்யம் | திருநாகை | திருநாகை |

நாள் தோறும் தம் வலையில் அகப்படும் முதல் வகை உயர்தர மீனை இறைவனுக்குப் படைத்த மீனவர்.




## 2.அப்பூதியடிகள்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
| --- | --- | --- | --- |
| அந்தணர் | தை சதயம் | திங்களூர் | திங்களூர் |

திருநாவுக்கரசரின் திருப்பெயரை ஓதிச் சிவப்பேறு பெற்றவர்.




## 3.அமர்நீதி நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வணிகர் | ஆனி பூரம் | பழையாறை | திருநல்லூர் |

அடியார் கொடுத்த கோவணம் மறைந்ததற்காக ஈடு செய்ய தன் மனைவி, மக்கள், சொத்துக்களுடன் தன்னையும் சிவனடியார்க்கு அர்ப்பணம் செய்த வணிகர்.




## 4.அரிவாட்டாய நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | தை திருவாதிரை | கணமங்கலம் | கணமங்கலம் |

பூசைப் பொருள்கள் தவறித் தரையில் உள்ள நிலவெடிப்பில் சிந்தியமையால் தம் ஊட்டியை தாமே அறுக்க முனைந்த வேளாளர்




## 5.ஆனாய நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| இடையர் | கார்த்திகை ஹஸ்தம் | திருமங்கலம் | திருமங்கலம் |

பஞ்சாட்சரத்தை வேய்ங்குழலில் இசைத்து முக்தி பெற்ற யாதவர்.




# 6.இசைஞானியார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| ஆதி சைவர் | சித்திரை சித்திரை | ஆரூர் (கமலாபுரம்) | திருநாவலூர் |

**சுந்தரரின் அன்னையார்.**





## 7.இடங்கழி நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளிர் | ஐப்பசி கார்த்திகை | கொடும்பாளூர் | கொடும்பாளூர் |

தம் செல்வத்தையும் அம்பாரத்தையும் சிவனடியார்கள் கொள்ளை கொள்ள விட்டு விட்ட ஒரு குறுநில மன்னர்.





# 8.இயற்பகையார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வணிகர் | மார்கழி உத்திரம் | பல்லவனீச்சரம் | சாய்க்காடு |

இல்லையென்னாது எதையும் அளித்தவர். தம் மனைவியையே சிவனடியார்க்கு மனமுவந்து அளித்த வணிகர்.





## 9.இளையான்குடி மாறர்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | ஆவணி மகம் | இளையான்குடி | இளையான்குடி |

வறுமையிலும், நள்ளிரவிலும் அடியார்க்கு அமுது அளித்த வேளாளர்.




## 10.உருத்திர பசுபதி நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | புரட்டாசி அசுவினி | தலையூர் | தலையூர் |

நாடோறும் திருவுருத்திர மந்திரங்களை ஓதி முக்தியடைந்த மறையவர்.




## 11.எறிபத்த நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அறியப்படவில்லை | மாசி ஹஸ்தம் | கருவூர் | கருவூர் |

கையிலிருந்த மழுவாயுதத்தால் சிவனடியார்களின் பகைவரைக் (பட்டத்து யானையை) கொன்று சைவத்தை வளர்த்தவர்.




## 12.ஏயர்கோன் கலிக்காம நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | ஆனி ரேவதி | பெருமங்கலம் | பெருமங்கலம் |

சுந்தரர் சிவபெருமானைத் தூது அனுப்பியதால் அவரைப் பகைத்துப் பின்னர் சூலைநோய் அடைந்து சுந்தரரின் தொடர்பைப் பெற்ற வேளாளர்.




## 13.ஏனாதிநாத நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| சான்றார் | புரட்டாசி உத்திராடம் | ஏனநல்லூர் | ஏனநல்லூர் |

திருநீற்றின் பொலிவைக் கண்டு அதிசூரனைக் கொல்லாமல் தாமே இறந்தவர்.





## 14.ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| குறுநில மன்னர் | ஐப்பசி மூலம் | திருக்கச்சி | திருக்கச்சி |

ஆட்சியைத் துறந்து சிவத் தலங்களை வழிபட்டு “ஷேத்திர வெண்பா” என்னும் நூலை இயற்றியவர்.





## 15.கணநாத நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | பங்குனி திருவாதிரை | காழி | காழி |

திருஞானசம்பந்தரை வழிபட்டுத் திருக்கயிலையை அடைந்த மறையவர்.




# 16.கணம்புல்ல நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| செங்குந்தர் | கார்த்திகை கார்த்திகை | பேளூர் | தில்லை |

கணம்புல்லை விற்று நெய் வாங்கி தீப திருப்பணி புரிந்தவர்.நெய் இல்லாததால் தலைமயிரையே எரித்தவர்.




## 17.கண்ணப்ப நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேடர் | தை மிருகசீருஷம் | உடுப்பூர் | திருக்காளத்தி |

சிவபெருமானுக்குத் தம் கண்களையும் கொடுத்த வேடுவர்.




## 18.கலிய நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| செக்கார் | ஆடி கேட்டை | திருஒற்றியூர் | திருஒற்றியூர் |

எண்ணெயும் விறகும் இல்லாத போது தமது ரத்தத்தால் விளக்கு எரித்து கோயிலில் ஒளி உண்டாக்கிய வாணியர்.





## 19.கழறிற்றறிவார் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
| --- | --- | --- | --- |
| அரசர் | ஆடி சுவாதி | கொடுங்கோளூர் | திருவஞ்சைக்களம் |

உவர்மண் பூசிய சலவைத் தொழிலாளனைச் சிவ வேடத்தை நினைவூட்டியதாக வணங்கியவர்.




## 20.கழற்சிங்க நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| குறுநில மன்னர் | வைகாசி பரணி | திருக்கச்சி | திருக்கச்சி |

பூ மண்டபத்தில் கீழே இருந்த மலரை முகர்ந்து பார்த்த தம் மனைவியாரின் கையை வெட்டியவர்.பல்லவ மன்னர்.




## 21.காரிநாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | அந்தணர் | திருக்கடவூர் | திருக்கடவூர் |

“காரிக்கோவை” என்னும் நூல் இயற்றி அதன் ஊதியத்தைக் கொண்டு தமிழ்ப் பணி புரிந்தவர்.




## 22.காரைக்காலம்மையார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வணிகர் | பங்குனி சுவாதி | காரைக்கால் | திருவாலங்காட்டில் |

இறைவனருளால் இருமுறை மாயமாங்கனி பெற்றவர். இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்டவர்.



## 23.குங்கிலியக் கலய நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | ஆவணி மூலம் | திருக்கடவூர் | திருக்கடவூர் |

நாடோறும் சிவபெருமானுக்குக் குங்கிலியத் தூபமிட்ட மறையவர்.





## 24.குலச்சிறை நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| மரபறியார் | ஆவணி அனுஷம் | மணமேல்குடி | மதுரை |

**பாண்டிய மன்னனின் முதல் அமைச்சராக இருந்து சைவ நெறியைக் காத்தவர்.**




## 25.கூற்றுவ நாயனார்

பிரபு மருதாடு

| குலம்; | பூசை நாள்; | அவதாரத்தலம்; | முக்தித்தலம்; |
|---|---|---|---|
| களப்பிரர் | ஆடி திருவாதிரை | களப்பால் | களப்பால் |

நடராசப் பெருமானின் திருவடியே தம் மணி முடியாக வழிபட்டவர்.





## 26.கலிக்கம்ப நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வணிகர் | தை ரேவதி | பெண்ணாகடம் | பெண்ணாகடம் |

சிவ வேடம் கொண்ட பணியாளனையும் வழிபட்டவர். மறுத்த மனைவி கையை வெட்டிய வணிகர்.




## 27.கோச்செங்கட் சோழ நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அரசன் | மாசி சதயம் | உறையூர் | உறையூர் |

திருவானைக்கா திருமதில் பணிகளைச் செய்தவர். 70 சிவன் கோயில்களைக் கட்டியவர்.




## 28.கோட்புலி நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | ஆடி கேட்டை | திருநாட்டியத்தான்குடி | திருநாட்டியத்தான்குடி |

சிவபெருமானுக்குப் படைப்பதற்காகத் தாம் சேமித்து வைத்த நெல்லை உண்ட சுற்றத்தினரைக் கொன்று நேர்மையை நிலை நாட்டிய வேளாளர்.





## 29.சடைய நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| ஆதி சைவர் | மார்கழி திருவாதிரை | திருநாவலூர் | திருநாவலூர் |

**சுந்தரரின் தந்தையார்.**




# 30.சண்டேசுவர நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | தை உத்திரம் | திருசேய்ஞலூர் | ஆப்பாடி |

சிவபூசைக்குரிய பால்குடங்களை உதைத்த தந்தையின் கால்களை வெட்டிய மறையவர்.




## 31.சக்தி நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | ஐப்பசி பூரம் | வரிஞ்சையூர் | வரிஞ்சையூர் |

சிவனடியார்களை இகழ்ந்தவர்களை நாவைத் தண்டாயம் என்னும் குறடு போலும் கருவியால் இழுத்து கத்தியால் அரிந்த வேளாளர்.




# 32.சாக்கிய நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | மார்கழி பூராடம் | திருச்சங்கமங்கை | திருச்சங்கமங்கை |

நாடோறும் கற்களையே மலராக நினைத்து சிவலிங்கத்தின் மீது எறிந்து தம் பக்தியை வெளிப்படுத்திய வேளாளர்.




## 33.சிறப்புலி நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | கார்த்திகை பூராடம் | ஆக்கூர் | ஆக்கூர் |

திருவைந்தெழுத்தை ஓதித் தாம் புரிந்த வேள்வியைச்
சிவபெருமானுக்கே தத்தம் செய்த மறையவர்.





# 34.சிறுத்தொண்ட நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| மாமாத்திரர் | சித்திரை பரணி | திருச்செங்காட்டங்குடி | திருச்செங்காட்டங்குடி |

இல்லை எனாமல் பிள்ளைக் கறி சமைத்துச் சிவனடியாரை வழிபட்டவர்.





## 35.சுந்தரமூர்த்தி நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| ஆதி சைவர் | ஆடிச் சுவாதி | திருநாவலூர் | திருவஞ்சைக்களம் |

இசை ஞானியார் ஆகியோரின் மைந்தர். சிவபெருமான் தோழர், தேவாரம் பாடிச் செந்தமிழ் வளர்த்த ஆதி சைவர்.





## 36.செருத்துணை நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | ஆவணி பூசம் | கீழ்த்தஞ்சை | ஆரூர் |

கழற்சிங்கரின் மனைவி பூமண்டபத்திலிருந்த மலரை முகர்ந்து பார்த்ததால் அவ்வம்மையாரின் மூக்கை அறுத்த வேளாளர்





## 37.சோமாசி மாற நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | வைகாசி ஆயிலியம் | அம்பர் | திருவாரூர் |

சிவ வேள்விகள் புரிந்து சுந்தரரை வழிபட்டுச் சிவபதம் அடைந்த மறையவர்.




# 38.தண்டியடிகள் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
| --- | --- | --- | --- |
| செங்குந்தர் | பங்குனி சதயம் | திருவாரூர் | திருவாரூர் |

திருவாரூர்க்கமலாலயக் குளத்தை பிறவிக் குருடராக இருந்தும் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்.




# 39.திருக்குறிப்புத் தொண்டர் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| சூரியகுலம்(வண்ணார்) | சித்திரை சுவாதி | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |

அடியார்களின் ஆடைகளின் அழுக்கு நீக்கி உதவியவர்.





## 40.திருஞானசம்பந்தர்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | வைகாசி மூலம் | சீர்காழி | சீர்காழி |

இறைவி தந்த ஞானப்பால் உண்டவர். தேவாரம் பாடிச் சைவமும், தமிழும் தழைக்கச் செய்த மறையவர்.




## 41.திருநாவுக்கரசு நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| சைவ வெள்ளாளர் | சித்திரை சதயம் | திருவாமூர் | திருப்புகலூரில் |

சைவமும், தமிழும் தழைக்கத் தேவாரம் பாடியவர். புறச் சமய இருளை நீக்கிய வேளாளர்.




## 42.திருநாளைப் போவார் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| புலையர் | புரட்டாசி ரோகிணி | ஆதனூர் | தில்லை |

பறையர் குலத்தில் தோன்றியவர். தில்லையில் தீக்குள் புகுந்து வேதியராகி முக்தியடைந்தவர்.




## 43.திருநீலகண்ட நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| குயவர் | தை விசாகம் | தில்லை | தில்லைப்புலீச்சரம் |

சிவனடியார்களுக்கு திருவோடு கொடுத்து அறம் புரிந்த குயவர்.




## 44.திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| பாணர் | வைகாசி மூலம் | எருக்கத்தம் | புலியூர் நல்லூர்ப் பெருமணம் |

**திருஞானசம்பந்தரின் பாடல்களை யாழில் அமைத்துப் பாடியவர்.**





## 45.திருநீலநக்க நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | வைகாசி மூலம் | சாத்தமங்கை | நல்லூர்ப் பெருமணம் |

**திருஞான சம்பந்தரின் திருமணத்தை தரிசித்துச் சிவப்பேற்றை அடைந்த மறையவர்.**





## 46.திருமூல நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| இடையர் | ஐப்பசி அசுவினி | சாத்தனூர் | திருவாவடுதுறை |

திருமந்திரம் பாடிய சித்தர்.




## 47.நமிநந்தியடிகள் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | வைகாசி பூசம் | ஏமப்பேறூர் | ஆரூர் |

சமணர்கள் எண்ணெய் தர மறுத்தமையால் குளத்து நீரையே கொண்டு விளக்கு எரித்த மறையவர்.





## 48.நரசிங்க முனையரைய நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| முனையர் | புரட்டாசி சதயம் | திருநாவலூர் | திருநாவலூர் |

போலிச் சிவனடியாரிடமும் அன்பு காட்டிய பெருந்தகையர். நம்பியைப் பெருஞ் செல்வமெனக் கொண்ட நரசிங்கமுனையார் அவரை அரச திருவெலாம் பொருந்த திருமணப் பருவம் அடையும்வரை வளர்த்தார்





## 49.நின்றசீர் நெடுமாற நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அரசர் | ஐப்பசி பரணி | மதுரை | மதுரை |

சமண சமயத்தவராக இருந்து திருஞானசம்பந்தரால் சைவ சமயத்துக்கு திரும்பப் பெற்றவர்.




## 50.நேச நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
| --- | --- | --- | --- |
| சாலியர் | பங்குனி ரோகிணி | காம்பீலி | ஆரூர் |

சிவனடியார்களுக்கு உடை, கோவணம்,கீள் முதலியன கொடுத்துக் காத்த சாலியர்.




## 51.புகழ்ச்சோழ நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அரசர் | ஆடி கார்த்திகை | உறையூர் | கருவூர் |

தாம் வெட்டிய பகையரசர்களின் தலை ஒன்று சடைமுடி தரித்திருப்பதை அறிந்து மனம் நொந்து தீப்புகுந்தவர்.




## 52.புகழ்த்துணை நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| ஆதி சைவர் | ஆனி ஆயிலியம் | அரிசிற்கரைப்புத்தூர் | அரிசிற்கரைப்புத்தூர் |

சிவபெருமான் திருவருளால் பஞ்சத்தில் நாடோறும் ஒவ்வொரு பொற்காசு பெற்றவர்.





## 53.பூசலார் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | ஐப்பசி அனுஷம் | திருநின்றவூர் | திருநின்றவூர் |

**மனக்கோயில் கட்டிச் சிவபெருமானை பிரதிட்டை செய்த மறையவர்.**




## 54.பெருமிழலைக் குறும்ப நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
| --- | --- | --- | --- |
| குறும்பர் (இடையர்) | ஆடி சித்திரை | மிழலை | மிழலை/ஆரூர் |

சுந்தரமூர்த்தி நாயனாரையே தொழுது அவரோடு சிவப்பேறு பெற்றவர்.




## 55.மங்கையர்க்கரசியார் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அரசர் | சித்திரை ரோகிணி | பழையாறை | மதுரை |

நின்றசீர் நெடுமாறனாரின் மனைவியாவார். திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரவேற்றுத் தம் கணவரைச் சைவராக்கினார்.



## 56.மானக்கஞ்சாற நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | மார்கழி சுவாதி | கஞ்சாறூர் | கஞ்சாறூர் |

தம் மகளின் நீண்ட கூந்தலைச் சிவனடியாரின் பஞ்சவடிக்காக அளித்த வேளாளர்.





# 57.முருக நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| அந்தணர் | வைகாசி மூலம் | திருப்புகலூர் | நல்லூர்ப் பெருமணம் |

மலர் மாலைகள் தொடுத்து இறைவனை வழிபடும் திருப்பணியில் ஈடுபட்ட மறையவர்.





## 58.முனையடுவார் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | பங்குனி பூசம் | நீடூர் | நீடூர் |

கூலிக்கு போர் செய்து திரட்டியபொருளை அடியார்க்கு வழங்கிய வேளாளர்




# 59.மூர்க்க நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | கார்த்திகை மூலம் | வேற்காடு | குடமூக்கு |

சூதாடி வென்ற பொருளால் சிவனடியார்க்கு அன்னதானம் செய்த வேளாளர்.




## 60.மூர்த்தி நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வணிகர் | ஆடி கார்த்திகை | மதுரை | மதுரை |

சந்தனக் கட்டை கிடைக்காதபோது தம் முழங்கையைத் தேய்த்து இறைவனுக்கு காப்பிட முனைந்த வணிகர்.





## 61.மெய்பொருள் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| மலையான்மான் | கார்த்திகை உத்திரம் | திருக்கோவலூர் | திருக்கோவலூர் |

அடியார்கள் திருவேடத்தையே மெய்பொருளாகக் கொண்டவர்.





# 62.வாயிலார் நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | மார்கழி ரேவதி | திருமயிலை | திருமயிலை |

சிவபெருமானுக்கு மனத்தினாலேயே திருக்கோயில் அமைத்து திருமஞ்சனம் தூப தீபம் பெற்றவர்.




# 63.விறன்மிண்ட நாயனார்

பிரபு மருதாடு

| குலம்: | பூசை நாள்: | அவதாரத்தலம்: | முக்தித்தலம்: |
|---|---|---|---|
| வேளாளர் | சித்திரை திருவாதிரை | செங்கண்ணூர் | ஆரூர்/வண்டாம்பாளை |

**தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார்களை வணங்காமையால் சுந்தரரையும் பகைத்த வேளாளர்.**